தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

18.11.2012 P.M

19.11.2012 A.M

## ரூ.107 கோடியில் 1,146 தானியக் கிடங்குகள்



தமிழ்நாட்டில் நெல் உள்பட 1.56 லட்சம் டன் தானியங்களை இருப்பு வைக்கும் வகையில் ரூ.107.50 கோடி மதிப்பில் 1,146 கிடங்குகள் கட்டப்பட்டுள்ளதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே. ராஜு தெரிவித்தார்.

÷விழுப்புரத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் 59-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா சனிக்கிழமை மாலை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் வா. சம்பத் தலைமை வகித்தார்.

÷விழுப்புரம் சட்டப்பேரவை உறுப்பினர் சி.வி. சண்முகம், நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழுப்புரம் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஆ. பாலகிருஷ்ணன் வரவேற்றார். கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் கே. ராஜூ பேசியது:

தமிழ்நாட்டை முதலிடத்துக்கு கொண்டு வரும் வகையில் முதல்வர் மக்களுக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படு0த்தி வருகிறார். கடந்த ஆண்டு ரூ.3 ஆயிரம் கோடி பயிர்க்கடன்

அறிவிக்கப்பட்டு, வட்டியில்லாமல், கூட்டுறவு சங்கங்களின் மூலம் ரூ.3,280 கோடி வழங்கப்பட்டுள்ளது.

÷இந்தாண்டு ரூ.6,400 கோடி வழங்க அறிவித்துள்ளார். 6 மாதங்களில் துறை மூலம் ரூ.2,305 கோடி வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் மொத்த கடனில் 20 சதவீதம் கொடுக்குமாறு முதல்வர் கூறினார்.

÷6 மாதத்தில் 5,66,954 விவசாயிகளுக்கு ரூ.23,057 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 99,658 ஆதி திராவிடர்களுக்கு ரூ.388.56 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான 7 சதவித வட்டியை அரசே ஏற்றுள்ளது.

÷விழுப்புரம் மாவட்டத்தில் கூட்டுறவு சங்கத்தில் ரூ.8 கோடி தி.மு.க-வினரால் முறைகேடு செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

÷உரம் விலை உயர்வதை அறிந்து முன்னதாகவே தாய்லாந்து, கனடா, சீனா போன்ற நாடுகளுடன் ஓப்பந்தம் போடப்பட்டு வாங்கி வைக்கப்பட்டுள்ளது. ரூ.130 கோடி மதிப்பில் வாங்கப்பட்டுள்ள உரம் இப்போது ரூ.150 கோடியாக உயர்ந்துள்ளது. எனினும், பழைய விலைக்கே தட்டுப்பாடு இல்லாமல் உரத்தை விற்பனை செய்ய முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

÷நெல் கொள்முதல் செய்யும் இடத்தில் கிடங்கு வசதி இல்லை என்பதால் தமிழகம் முழுவதும் ரூ.107.50 கோடி செலவில் 9 மாதத்தில் 1,146 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் 1.56 லட்சம் மெட்ரிக் டன் தானியங்களை இருப்பு வைக்கலாம். விவசாயிகள் கிடங்குகளில் வைத்துள்ள பொருள்களுக்கு ரூ.3 லட்சம் வரை கடன் பெறலாம்.

கூட்டுறவுத் தேர்தலை மோசமாக நடத்தியது தான் கூட்டுறவு துறை நலிவுற்றதுக்கு காரணம். தற்போது கூட்டுறவுத் தேர்தலை முறையாக நடத்த முதல்வர் கமிஷன் அமைத்துள்ளார். 2023-ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டில் மக்கள் இலவசங்களுக்கு கையேந்தக் கூடாது என்ற உயரிய எண்ணத்தில் முதல்வர் செயல்பட்டு வருகிறார் என்றார் அமைச்சர்.

÷இதில் ஊரக தொழில்துறை அமைச்சர் ப.மோகன், விழுப்புரம் நகர்மன்றத் தலைவர் கோ. பாஸ்கரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

18th nov 2012 P.M

**தியாகதுருகத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கக் கோரிக்கை**

கள்ளக்குறிச்சியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநாடு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பி.தங்கராசு தலைமை வகித்தார். பி.மணி, ஆர்.சாந்தமூர்த்தி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஏ.வி.ஸ்டாலின் மணி தொடக்க உறையாற்றினார்.

÷தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஆர்.தாண்டவராயன் சிறப்புரையாற்றினார். இந்திய விவசாயிகள் தொழிலாளர்கள் சங்க ஒன்றியச் செயலாளர் ஆர்.செல்வராஜ், விவசாயத் தொழிலாளர் சங்கம் அ.பா.பெரியசாமி உள்ளிட்டோர் பேசினர்.

தீர்மானங்கள்: நெல் குவிண்டாலுக்கு ரூ.2 ஆயிரமும், கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 500-ம் விலை வழங்க வேண்டும். விவசாயத்திற்குத் தடையின்றி மின்சாரம் வழங்க வேண்டும்.

÷கள்ளக்குறிச்சி வட்டம் தியாகதுருகம் பகுதியில் விவசாயிகளின் நலன் கருதி நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் உள்ள அனைத்து வங்கிகள், கூட்டுறவு சங்கங்களில் அனைத்து பயிர்களுக்கும் பயிர்க்கடன் வழங்க வேண்டும்.

÷கள்ளக்குறிச்சி வட்டத்தில் வன விலங்குகளால் பாதிக்கப்படும் பயிர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும்.

வன விலங்குகளைக் கட்டுப்படுத்த சோலார் மின் வேலி அமைத்து பயிர்களை பாதுகாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**உழவர் பாதுகாப்புத் திட்டம் : விடியோ கான்பரன்ஸில் ஆய்வு**

உழவர் பாதுகாப்புத் திட்டம் குறித்து முதன்மைச் செயலாளர் மற்றும் நில சீர்திருத்தத் துறை ஆணையர் ஜெயஸ்ரீ ரகுநாதன், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் வா. சம்பத்துடன், வீடியோ கான்பரன்ஸ் மூலம் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

இதில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உறுப்பினராக உள்ள விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களில் எச்.ஐ.வி. காசநோய், புற்றுநோய் மற்றும் இதர நோயினால் பாதிக்கப்பட்டு இயலாமையில் உள்ளவர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்குவது குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

÷சிறப்பு விளம்பரம், வாரம் மற்றும் மனுக்கள் பெறும் வாரங்களில் பெறப்பட்ட மனுக்கள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இனி வரும் காலங்களில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தும் விதம் குறித்தும் அறிவுரைகள் கூறப்பட்டது.

இதில் ஆட்சியருடன், சார் ஆட்சியர் சுபோத்குமார், சமூகப் பாதுகாப்புத் திட்ட தனி துணை ஆட்சியர் க. இளங்கோவன், கோட்டாட்சியர்கள் மீனாபிரியதர்ஷினி, சி. ராஜசேகரன், 9 வட்டங்களைச் சேர்ந்த சமூக பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பயிர்க் கடன் வசூலில் வங்கிகள் கெடுபிடி : விவசாயிகள் புகார்

தேனி மாவட்டத்தில் உள்ள சில வங்கிகளில், விவசாயிகளின் சேமிப்புக் கணக்கில் உள்ள தொகையை முன்னறிவிப்பின்றி பயிர்க் கடன் கணக்கில் வரவு வைத்து, வங்கிகள் கெடுபிடி வசூல் நடத்தி வருவதாக ஆட்சியர் கே.எஸ். பழனிசாமியிடம் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை ஆட்சியர் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.விஜயாராணி, வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரம், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செ. முத்தையா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்தக் கூட்டத்தில், பெரியகுளம் அருகே மேல்மங்கலம் கிராமத்தில் வாய்க்கால் தூர்வாருதல், தடுப்புச் சுவர் அமைத்தல் ஆகிய பணிகளை விரைந்து முடிக்க வேண்டும், விவசாய நிலங்களில் காற்றாலை நிறுவியுள்ள பகுதிகள் தரிசாக போடப்பட்டுள்ளதால், உணவுப் பயிர் சாகுபடி பரப்பளவு குறைந்து வருவதைத் தடுக்க வேண்டும், இறவை பாசனக் கிணறுகளில் சோலார் மின் சக்தியை பயன்படுத்தி மோட்டார் பம்புகளை இயக்குவதற்கான தொழில்நுட்பம், செலவு, அரசு மானியம் உள்ளிட்ட விவரங்களைத் தெரிவிக்க வேண்டும், உத்தமபாளையம்-சுருளித் தீர்த்தம் சாலையில் காமயகவுண்டன்பட்டி பகுதியில் உள்ள சாலை ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்,

பயிர் சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

இதற்கு ஆட்சியர் பதிலளித்து பேசியது: மேல்மங்கலம் வாய்க்காலில் தற்போது மழை நீர் தேங்கியுள்ளது. தண்ணீர் வடிந்தவுடன் பணிகள் விரைந்து முடிக்கப்படும். காற்றாலை நிறுவியுள்ள பகுதிகளில், பயறு மற்றும் எண்ணைய் வித்து பயிர் சாகுபடி செய்ய, மாவட்ட விவசாயத் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். சோலார் சக்தி மூலம் விவசாயக் கிணறுகளில் உள்ள மோட்டார் பம்புகள் இயக்கப்படுவதை விவசாயத் துறை அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு, விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்க வேண்டும். காமயகவுண்டன்பட்டி பகுதியில் உள்ள சாலை ஆக்கிரமிப்பை அகற்ற உத்தமபாளையம் வட்டாட்சியர், நெடுஞ்சாலைத் துறை செயற்பொறியாளர் ஆகியோர் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். பயிர்க் கடன் வசூல் குறித்து விவசாயிகள் தெரிவிக்க, புகாரின் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட முன்னோடி வங்கி மேலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கால்நடைத் துறை மூலம், மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத்தை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

## கறவை மாட்டு பண்ணை அமைக்க இலவச பயிற்சி

கரூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வணிக ரீதியிலான கறவை மாட்டுப் பண்ணை அமைக்க இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து இந்த மையத்தின் தலைவர் கே. செந்தில்வேல் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கரூர் மாவட்டம், பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் நவ. 22-ல் ஒரு நாள் வணிக ரீதியிலான சிறிய கறவை மாட்டுப் பண்ணை அமைத்தல் குறித்த பயிற்சி நடைபெற உள்ளது.

இந்தப் பயிற்ச்சியில் கறவை மாடு வளர்ப்பு, பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, நோய்கள் மற்றும் அவற்றைத் தடுக்கும் முறைகள், விற்பனை உத்திகள், பண்ணைப் பொருளாதாரம் ஆகிய தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 04324 - 294335 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து பயன்பெறலாம் என்றார்.

## நவ. 20 -ல் இயற்கை விவசாயப் பயிற்சி

இயற்கை விவசாயம் குறித்த ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நவ. 20-ல் வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் வெளியிட்ட அறிக்கை:

இயற்கை விவசாயம் எனப்படும் அங்கக வேளாண்மையைக் கடைப்பிடித்தால் மண், நீர்வளம், சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தவிர்க்க முடியும். அத்துடன் இயற்கை விவசாய விளைபொருள்களுக்கு சந்தையில் கூடுதல் விலையும் கிடைக்கும்.

இத்தகைய அங்கக வேளாண் முறை, அங்கக வேளாண்மை சான்று பெறுதல் குறித்தும் இயற்கை விவசாயம் செய்யும் முன்னோடி விவசாயிகள் தங்களது அனுபவங்களை எடுத்துரைக்க உள்ளனர். எனவே, ஆர்வமுள்ள விவசாயிகள் இதில் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர் வேளாண்மை அறிவியல் நிலையம், வம்பன்- 622 303. தொலைபேசி: 04322-290 321 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

## பருத்தியில் பயிர் பாதுகாப்பு முறை பயிற்சி

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் வேளாண் விரிவாக்கப் பணியாளர்களுக்கு பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை குறித்த பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் சர்.ரத்தன் டாடா அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற இந்த முகாமை பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பி. சங்கரலிங்கம் தொடக்கிவைத்துப் பேசினார்.

வேப்பூர் வட்ட வேளாண் உதவி இயக்குநர் சந்திரசேகர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இயங்கி வரும் சர்.ரத்தன் டாடா அறக்கட்டளையின் புதுப்பிக்கப்பட்ட பசுமைப் புரட்சித் துறையின் இயக்குநர் முனைவர் ராமநாதன் உள்ளிட்டோர் விளக்கவுரையாற்றினர்.

சிவகங்கை மாவட்ட வேளாண் அறிவியல் நிலைய பயிர் பாதுகாப்புத்துறை வல்லுநர் சி. சங்கர், பி.டி. பருத்தியில் சாறுஉறிஞ்சும் பூச்சிகள் மற்றும் மேலாண்மை முறைகள், மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்துப் பயிற்சி அளித்தார்.

அறக்கட்டளை திட்ட ஒருங்கிணைப்பாளர் சேவியர்  வரவேற்றார்.

ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொறுப்பு) ஜெ. கதிரவன் நன்றி கூறினார். முகாமில் வேளாண் விரிவாக்கப் பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சம்பா பயிர்களில் நோய் பாதிப்பு: வேளாண் துறையினர் ஆய்வு

திருவாரூர் மாவட்டம், கோட்டூர், முத்துப்பேட்டை ஒன்றியத்திற்கு உள்பட்ட பகுதிகளில் நோயால் பாதிக்கப்பட்டுள்ள சம்பா நெல் பயிர்களை வேளாண் துறை அலுவலர்கள் சனிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

கோட்டூர், முத்துப்பேட்டை பகுதிகளில் சுமார் 30 ஆயிரம் ஹெக்டேரில் நெல் நேரடி விதைப்பு, நடவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் அண்மையில் பெய்த தொடர் மழைக் காரணமாக, நெல் பயிர்கள் ஆங்காங்கே மஞ்சள் நிறமாக மாறி, இலையின் இரு பக்கமும் கருகி காணப்படுகின்றன என விவசாயிகள் வேளாண் துறை அலுவலகங்களில் தெரிவித்தனர்.

இதையடுத்து, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் க. மயில்வாகணன், வேளாண்மை ஆணையரக துணை இயக்குநர் சந்தானகோபாலகிருஷ்ணன், வேளாண்மை உதவி இயக்குநர்கள் திருத்துறைப்பூண்டி நடேசன், கோட்டூர் சிவக்குமார், கோட்டூர் ஒன்றியக் குழுத் தலைவர் வீ. ஜீவானந்தம் ஆகியோர் கும்மட்டித்திடல், புத்தகரம், மண்ணுக்குமுண்டான், பெருகவாழ்ந்தான், கோட்டூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சம்பா பயிரிடப்படுள்ள வயல்களை சனிக்கிழமை பார்வையிட்டு விவசாயிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தனர்.

அப்போது அவர்கள் கூறியது: இந்த நோய்களைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ் பாக்டீரியா திரவம் ஏக்கருக்கு 2 லிட்டர், தயிர் 2 லிட்டர், 200 லி. தண்ணீரில் கலந்து பயிர்களில் நன்கு நனையும்படி கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

இந்த வகை பாக்டீரிய திரவ வடிவம் அனைத்து விரிவாக்க மையங்களிலும் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டு, 50% மானியத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், பாதிப்பு அதிகம் உள்ள வயல்களுக்கு கார்பன் ஹெட்ராக்சைடு மருந்தை ஏக்கருக்கு 400 கிராம் என்ற அளவில் 200 லி. தண்ணீரில் கலந்து பயிர்களில் தெளித்து நோயைக் கட்டுப்படுத்தலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## தீவனப்புல் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனங்களை தங்கள் நிலத்திலேயே சாகுபடி செய்ய வேண்டும் என்றார் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை ஆகியன இணைந்து மாநில தீவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக ஒரு நாள் பயிற்சி முகாமை வெள்ளிக்கிழமை நடத்தின.

முகாமிற்கு தலைமை வகித்து ஆட்சியர் பேசியது:

பசுந்தீவனங்கள் கால்நடைகளின் ஆரோக்கியத்தை பேணிக்காப்பது மட்டுமில்லாமல், குறைந்த செலவில் அதிக உற்பத்தித் திறனை கொடுக்கவல்லது. விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்குத் தேவையான சத்துமிகுந்த சமச்சீரான பசுந்தீவனப் பயறு வகைப் பயிர்களை தங்கள் நிலங்களிலேயே சாகுபடி செய்ய வேண்டும் என்றார்.

கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் வி. சுப்பையன், நிலைய உதவிப் பேராசிரியை முனைவர் ச. ஆனந்தகிருஷ்ணவேணி ஆகியோர் தொழில்நுட்ப விளக்கம் அளித்தனர்.

முன்னோடி விவசாயிகள், அறிவியல் நிலைய விஞ்ஞானிகள், கால்நடை மருத்துவர்கள் பயிற்சியில் கலந்துகொண்டனர். நிலைய தலைவர் தி. செங்குட்டுவன் வரவேற்றார். கால்நடை மருத்துவர் ஜி. மகேந்திரன் நன்றி கூறினார்.

## இயற்கை விதிகளை அறிந்துவிவசாயம் செய்ய வேண்டும்

நிலக்கோட்டை:""இயற்கை விதிகளை அறிந்து செய்வதே, இயற்கை விவசாயம்," என இயற்கை வேளாண் விவசாயி நம்மாழ்வார் பேசினார். மைக்கேல்பாளையத்தில் "சிறப்' நிறுவனம் சார்பில் இயற்கை வேளாண் கருத்தரங்கு நடந்தது. நம்மாழ்வார் பேசியதாவது: ரசாயன உரங்களால், விஷத்தை உணவாக சாப்பிடுகிறோம். யூரியாவில் உள்ள நைட்ரஜன், மனிதர்கள், கால்நடைகள், தாவரங்கள் வெளிவிடும் சுவாச காற்றிலேயே உள்ளது.இதனால் விவசாயத்திற்கு கால்நடைகள் முக்கியம். விற்க கூடாது. இயற்கை வேளாண் விவசாயத்தை வளர விடாமல் தடுக்க பல்வேறு சக்திகள் உருவாகி உள்ளன. தடைகளை ஒழித்து முன்னேற வேண்டும்.வருங்காலத்தில் விவசாயமே முக்கிய தொழிலாக இருக்கும். ஒரு முறை கரும்பு நடவு செய்தால், மூன்று முறை அறுவடை செய்வது வழக்கம். பெங்களூருவில், விவசாயி ஒருவர் இயற்கை விவசாயத்தின் மூலம் 23 வது முறையாக அறுவடை செய்கிறார், என்றார். "சிறப்' நிறுவன இயக்குனர் மோகன் உட்பட

பலர் கலந்துகொண்டனர்.அமிர்த, தாவர கரைசல்கள், பஞ்சகவ்யம் தயாரிப்பது குறித்து செயல்முறை விளக்கம் நடந்தது.

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும், 22ம் தேதி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது.

கலெக்டர் பூஜா குல்கர்னி வெளியிட்ட அறிக்கை:

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும், 22ம் தேதி காலை, 11 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கூட்டத்தில், அனைத்து துறை மாவட்ட உயர் அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர்.

எனவே, கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

19.11.2012 A.M

## 100% மானியத்தில் வேளாண்மை இடுபொருள் எம்.எல்.ஏ., வழங்கல்

வேதாரண்யம்: வேதாரண்யம் அடுத்த வாய்மேடு கிராமத்தில் வேளாண்மைத்துறை சார்பில், 31 விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியத்தில் உபகரணங்கள் வழங்கும் விழா நடந்தது.

பஞ்., யூனியன் தலைவர் சுசீலாதேவி, கவுன்சிலர் நடராஜன் முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி அலுவலர் ரவி வரவேற்றார். இவ்விழாவில் தலைமை வகித்து எம்.எல்.ஏ., காமராஜ், 26 பயனாளிகளுக்கு, 100 சதவீதம் மானியத்தில், ஐந்து லட்சம் ரூபாய் மதிப்பில், பயறு வகை பயிர்களுக்கு தெளிப்புநீர் கருவிகளும், தலா, 10 ஆயிரம் ரூபாய் மானியத்தில், ஐந்து விவசாயிகளுக்கு ஆயில் இன்ஜின்களும் வழங்கி பேசினார்.

## வறட்சியில் வளரும் மக்காச்சோளம்விவசாயிகள் பயிரிட வேண்டுகோள்

திண்டுக்கல்:வறட்சியை தாங்கிக்கொண்டு வளரும் தண்மை கொண்ட மக்காச்சோளத்தை பயிரிடுமாறு விவசாயிகளுக்கு வேளாண்மை துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் திண்டுக்கல் வேளாண்மை துறை அலுவலகத்தில் நடத்தப்பட்டது. கண்காட்சியினை கலெக்டர் வெங்கடாசலம் திறந்து வைத்தார். அவர் பேசுகையில்,""புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். வறட்சியிலும் வேகமாக வளரும் மக்காச்சோளத்தை அதிக அளவில் பயிரிட வேண்டும்'' என்றார்.திண்டுக்கல் வேளாண் மை துணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, கலெக்டரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) கார்த்திகேயன், தோட்டக்கலை உதவி இயக்குனர் ராமநாதன் உட்பட பலர் பங்கேற்றனர்.வேளாண்மை உதவி இயக்குனர் அருள் அரசு ஏற்பாடுகளை செய்திருந்தார். உதவி வேளாண்மை அலுவலர் ராஜகோபால் நன்றி கூறினார்.

## வெற்றிலை ஆராய்ச்சிமையம் தேவை

பெரியகுளம்: வடுகபட்டி, தாமரைக்குளம், மேல்மங்கலம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி உட்பட பல பகுதிகளில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் வெற்றிலை மாநிலத்தில் பல பகுதிகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. வெள்ளை, பச்சை, கற்பூரம், அந்தியூர், கணியூர், சிறுகமணி-1, சிறகமணி-2 உட்பட வெற்றிலையில் பல ரகங்கள்

உள்ளன. விவசாயிகள் தரமான விதைக் கொடிகளை தேர்வு செய்கின்றனர். இருந்தபோதிலும் சாதரண விதைக் கொடிகள் வழியாக தீச்சல், வாடல், ஈரப்புள்ளி மற்றும் கருந்தாள் நோய்கள் பரவுகின்றன. வெற்றிலையில் பூச்சி மற்றும் நூற்புழு நோய்களால் கடந்த பருவத்தில் பாதிப்பு ஏற்பட்டது. இதனால், பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், நிரந்தரமாக வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## உணவுபதப்படுத்தும் தொழிற்சாலை துவக்க மானியத்துடன் கடனுதவி :

சிவகங்கை:""மாவட்டத்தில்,உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை துவக்க, மானியத்துடன் கடனுதவி வழங்கப்படும்," என, சிவகங்கை கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார். அவர் கூறியதாவது: உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க, நவீன படுத்த தேவையான கருவி, தளவாட சாமான்கள் வாங்க, 25 சதவீதம் மானியத்துடன் அதிக பட்சம் 50 லட்ச ரூபாய் கடன் பெறலாம். பால், இறைச்சி வகைகளை பதப்படுத்தி அனுப்ப தேவையான குளிர்சாதன கருவி, வாகனத்திற்கு 50 சதவீத மானியத்தில், ரூ.10 கோடி வரை பெறலாம். உணவு பதப்படுத்தும் பட்டயம், பட்டய படிப்பு துவக்க, ரூ.75 லட்சம் வரை கிடைக்கும். இவை தவிர்த்து உணவு பதப்படுத்தும் தொழில்செய்ய முன்வோருக்கு பயிற்சி அளிக்க, நிறுவனங்களுக்கு தேவையான நிதி உதவிகள் வழங்கப்படும். இதன் மூலம் விவசாயிகளின் விளை பொருட்களுக்கு பாது காப்பு கிடைப்பதுடன், பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும், என்றார்.

## திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி முகாம்

சிவகிரி:வாசு.,வட்டாரம் மலையடிக்குறிச்சியில் விவசாய தொழிலாளர்களுக்கான திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.வாசுதேவநல்லூர் வட்டாரம் மலையடிக்குறிச்சி கிராமத்தில் நீர்வள நிலவள திட்டத்தில் பயன்பெறும் தொழிலாளர்களுக்கான திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி பஞ்., தலைவர் கருத்தப்பாண்டியன் தலைமையில் நடந்தது. முகாமில் பஞ்., யூனியன் தலைவர் தங்கமாரி துரைப்பாண்டியன், கவுன்சிலர் மோகன் மற்றும் அட்மா தலைவர் ராமச்சந்திரன் பேசினர்.மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சவுந்திரராஜன், திருந்திய நெல் சாகுபடி பற்றியும், தற்போதைய சூழ்நிலையில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை பெருக்குவதில் திருந்திய நெல் சாகுபடியின் முக்கியத்துவம் பற்றியும் கூறினார்.

மேலும் அனைத்து விவசாயிகளையும் திருந்திய நெல் சாகுபடி முறையை கடைபிடித்து அதிக மகசூல் பெற்று பயனடைய கேட்டுக் கொண்டார்.வேளாண்மை உதவி இயக்குனர் பெருமாள்,

திருந்திய நெல் சாகுபடியில் விதைநேர்த்தி செய்தல், உயிர் உரங்களின் பயன்பாடு பற்றி கூறினார். வேளாண்மை அலுவலர் ராமசாமி, திருந்திய நெல் சாகுபடி முறையில் ஒருங்கிணைந்த முறையில் உரமிடுதல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பற்றி பேசினார். துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன், திருந்திய நெல் சாகுபடி முறையில் கோனோவீடர் களைக்கருவி கொண்டு களையெடுத்தல் மற்றும் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் பற்றி பேசினார்.உதவி வேளாண்மை அலுவலர் நயினார் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் மாரியப்பன், பரமசிவன், காமாட்சிநாதன், ஜெயப்பாண்டியன், கருப்பையா செய்திருந்தனர்.

## புதுகையை வறட்சி மாவட்டமாக அறிவிக்க விவசாயிகள் கோரிக்கை

புதுக்கோட்டை: புதுக்கோட் டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.

மாவட்ட கலெக்டர் மனோகரன் தலைமை வகித்தார். டி.ஆர்.ஓ., நாகராசன், திட்ட இயக்குனர் சக்திவேல், வேளாண் இணை இயக்குனர் சிவசங்கரன், தோட்டக்கலை துணை இயக்குனர் சம்பத்குமார் உட்பட அரசுத்துறை அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் நடந்த விவாதம் கீழ்வருமாறு:

ஆரோக்கியசாமி: 50 ஆண்டுகளுக்கும் மேலாக விவசாயம் செய்து வரும் என்னுடைய நிலத்துக்கு, பிறர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதை, ரத்து செய்யுமாறு வருவாய்த்துறையினருக்கு, பலமுறை மனு கொடுத்தும் இதுவரை ரத்து செய்யவில்லை.

கலெக்டர்: விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சொக்கலிங்கம்: டெல்டா பகுதிகளில் உள்ள தனியார் உர விற்பனை நிலையங்களில், அதிக விலைக்கு உரம் விற்பனை செய்யப்படுகிறது.

கலெக்டர்: நிர்ணயிக்கப்பட்ட விலையை விட, அதிக விலைக்கு உரம் விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நீலமேகம்: பெருங்களூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில், நகை அடமானத்தின் பேரில் பெறப்பட்ட கடன் தொகையை முழுமையாக செலுத்தியும், நகைகளை திருப்பி வழங்க வங்கி செயலாளர் மறுத்து வருகிறார்.

கலெக்டர்: கூட்டுறவு வங்கி அதிகாரிகள் மூலம் விசாரணை நடத்தப்படும்.

தனபதி: பயிர் சாகுபடிக்கான செலவு பலமடங்கு அதிகரித்துள்ளதால், விவசாயத்துக்கான கடன் தொகையை அதிகரிக்க வேண்டும். விவசாயிகளுக்கு அடமானம் எதுவும் இன்றி பயிர்கடன் வழங்க வேண்டும்.

துரைமாணிக்கம்: ஆவுடையார்கோவில் சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த மழையால் சேதமடைந்துள்ள பயிர்களுக்கு, நிவாரணம் வழங்க வேண்டும். அப்பகுதிகளில் உள்ள

நீர்நிலைகளை தூர்வாரி ஆழப்படுத்தவேண்டும்.

சோமையா: குரங்கு, மயில் போன்ற வனவிலங்குளால் வாழை, கரும்பு, நிலக்கடலை போன்ற பயிர்கள் சேதமடைந்து வருகிறது. இதனால், விவசாயிகள் பெரும் இழப்புக்கு உள்ளாகி வருகின்றனர். வன விலங்குகளால் சேதமடையும் பயிர்களுக்கு, இழப்பீட்டு தொகை வழங்கவேண்டும்.

மாதவன்: பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்யாததால், நீர்நிலைகள் அனைத்தும் தண்ணீரின்றி வறண்டுள்ளது. எனவே, மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும்.

ராமசாமி: கல்லணை கால்வாய் மூலம் பாசனவசதி பெறும் கடைமடை பகுதிகளை பாதுகாக்க, மணமேல்குடி தாலுகாவில் கல்லணை கால்வாய் கோட்ட அலுவலகம் (பொதுப்பணித்துறை பாசன பிரிவு) திறக்க வேண்டும்.

ராமதீர்த்தார்: விவசாயிகளின் கோரிக்கைகளை அதிகாரிகள் அலட்சியம் செய்து வருகின்றனர். இந்த நிலை மாறவேண்டும்.இவ்வாறு விவாதம் நடந்தது.

## சொட்டு நீர் பாசன முறையை கடைபிடிக்க விவசாயிகள் ...தயக்கம்

காஞ்சிபுரம்:சொட்டு நீர் பாசனம் அமைக்கும் விஷயத்தில், தனியார் ஒப்பந்த நிறுவனங்கள் ஒத்துழைப்பு

தராததால், விவசாயிகள் அம்முறையை பின்பற்ற தயங்குகின்றனர். பாசனத்திற்கு நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், விவசாயிகள் சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்த தயக்கம் காட்டுவது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த பத்து ஆண்களுக்கு முன், 9.5 லட்சம் ஏக்கர் பரப்பளவில்

விவசாயம் நடந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளாக, தொழிற்சாலைகளின் பெருக்கம், வீட்டு மனை வியாபாரம், விவசாயத்திற்கு ஆட்கள் பற்றாக்குறை ஆகியவற்றால், விளை நிலப்பரப்பு 2.5 லட்சம் ஏக்கர் என சுருங்கி விட்டது.மாற்றுப்பயிர்போதிய மழை இன்றி, நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டதால், விவசாயிகள் பயிர் செய்ய தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், பெரும்பாலான விவசாயிகள், அதிக நீர் தேவைப்படும் நெல் உள்ளிட்ட பயிர்களை தவிர்த்து, தோட்டக்கலைப் பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். சொட்டு நீர் பாசன முறையை பின்பற்றினால், அனைத்து பயிர்களையும் விளைவிக்கலாம் என்ற நிலையில், அதில் ஈடுபட விவசாயிகள் தயக்கம் காட்டுகிறனர்.மானியம்

தோட்டக்கலை மற்றும் வேளாண்மை துறையில் பயிரிடப்படும் இரண்டு ஏக்கருக்குள் உள்ள குறு விவசாயிக்கும், ஐந்து ஏக்கருக்குள் உள்ள சிறு விவசாயிக்கும் நூறு சதவீதம் மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்கவும், ஐந்து ஏக்கருக்கு மேல் வைத்திருக்கும் இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியத்தில், சொட்டு நீர் பாசனம் அமைக்கவும் அரசு உதவுகிறது.

இத்திட்டம், பல்வேறு தனியார் நிறுவனங்கள் மூலமாக செயல்படுத்தப்படுகிறது.ஒரு மாவட்டத்திற்கு 250 ஹெக்டேரும் (650 ஏக்கர்), ஒன்றியத்திற்கு, 19 ஹெக்டேர் (40 ஏக்கர்) என, திட்டத்தின் மூலம் மானியம் வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் தோட்டக்கலை மற்றும் வேளாண்மை துறை இணைந்து, 400 ஏக்கர் வரையில் தான் இலக்கை எட்டுகின்றனர். எஞ்சிய இலக்கை எட்ட முடியவில்லை. இதற்கு, விவசாயிகளின் தயக்கமே காரணம்.அலைக்கழிப்புஇது குறித்து விவசாயி ஆறுமுகம் கூறியதாவது:சொட்டு நீர் பாசனம் திட்டத்திற்கு விண்ணப்பித்தால், பல்வேறு தகவலை கேட்டு, வங்கி மற்றும் வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கும் அலைக்கழிக்கிறனர்.

பல்வேறு தடைகளை தாண்டி வந்தாலும், அரசால் நியமிக்கப்பட்டுள்ள சொட்டு நீர் பாசனம் அமைக்கும் நிறுவனங்கள்,

எங்களுக்கு முறையாக வழிகாட்டுவதில்லை.இவ்வாறு ஆறுமுகம் கூறினார்.வேளாண் துறை அதிகாரிகளும், அரசு ஒப்பந்தம் பெற்ற சொட்டு

நீர்பாசனம் அமைக்கும் தனியார் நிறுவனங்களும், ஒரு ஆண்டு வரையில், விவசாயிகளுடன் இணைந்து, பராமரிப்பு பணியை செய்ய வேண்டும். இதை எந்த சொட்டுநீர் பாசனம் அமைக்கும் நிறுவனங்களும் பின் பற்றுவதில்லை.சொட்டு நீர் பாசனம் அமைக்க உதவும் தனியார் நிறுவனங்கள், ஓராண்டு வரையில், தடவாளப் பொருட்கள் உடைந்தால், மாற்றி கொடுக்க வேண்டும்.

ஒத்துழைப்பு இல்லைஆனால், அதை அந்த நிறுவனங்கள் செய்ய முன் வருவதில்லை. இதனால் தான், சொட்டு நீர் பாசனத்தில் ஈடுபட விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

தற்போதுள்ள வறண்ட சூழ்நிலையில், சொட்டு நீர் பாசனத்தின் அவசியத்தை உணர்ந்து, வேளாண் துறை அதிகாரிகளும், தனியார் நிறுவனங்களும் விவசாயிகளுடன் இணைந்து செயல்பட வேண்டும். அதற்கு, மாவட்ட ஆட்சியர் சித்ரசேனன் முழு முயற்சி எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## வரும் 23ம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

திருவள்ளூர்:விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வரும் 23ம் தேதி நடக்கிறது.

மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வரும் 23ம் தேதி வெள்ளிக்கிழமை, காலை 11:00 மணியளவில், திருவள்ளூர் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது.

ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்ட கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு உள்ளிட்ட வேளாண் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகள் குறைகளுக்கு, தீர்வு காண உள்ளனர்.

இந்த வாய்ப்பினை இம்மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பயன்படுத்தி, கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு திருவள்ளூர் ஆட்சியர் வீரராகவ ராவ் கேட்டுக் கொண்டு உள்ளார்.

## முன்பருவ முனைப்பு முகாம் வேளாண் அலு வலர் பங்கேற்பு

தா.பேட்டை: வாளசிராமணியில் தீவிர முன்பருவ முனைப்பு முகாம் நடந்தது.
முசிறி அருகேயுள்ள தா.பேட்டை யூனியன் வாளசிராமணி பஞ்சாயத்தில், வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் தீவிர முன்பருவ முனைப்பு முகாம் நடந்தது.
நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் செல்வம் வரவேற்றார். பஞ்சாயத்து தலைவர் கனகராஜ் தலைமை வகித்தார். வேளாண்மை துணை இயக்குனர் (மாநில திட்டம்) சபாநடேசன் வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்தும், தோட்டக்கலை உதவி இயக்குனர் கணேசன், வேளாண் பொறியியல் துறை ஜெயபால் கண்ணன், வி.ஏ.ஓ., பத்மநாபன் ஆகியோர் பங்கேற்று திட்டங்கள் குறித்து பேசினர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் அசோக்குமார், செந்தில்குமார், ரவி, ரேவதி செய்திருந்தனர். உதவி வேளாண்மை அலுவலர் மனோகரன் நன்றி கூறினார்.

## ஒப்பந்த கோலியஸ் சாகுபடியாளருக்கு ஊக்கத்தொகை

ஆத்தூர்: ஆத்தூர், மஞ்சினி எம்.ஜி.பி., நிறுவனமும், அன்னை பசுமை பூமி மூலிகை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பும் இணைந்து நடத்திய ஒப்பந்த கோலியஸ் சாகுபடியாளர்களை பாராட்டி ஊக்கத்தொகை வழங்கும் விழா மற்றும் தொலைநோக்கு வேளாண் சந்தைகள் குறித்த கருத்தரங்கு, மஞ்சினி கேட் எம்.ஜி.பி., வேளாண் கோட்டத்தில் நடந்தது.
விழாவில், வளையமாதேவி பஞ்சாயத்து தலைவரும், அன்னை பசுமை பூமி உழவர்கள் கூட்டமைப்பு தலைவருமான வரதராஜன் அனைவரையும் வரவேற்றார். எம்.ஜி.பி., நிறுவன தலைவரும், அன்னை பசுமை பூமி உழவர்கள் கூட்டமைப்பு தலைவருமான பழனிவேல் தலைமை வகித்தார்.
விழாவில், சென்னை குடும்ப நல நீதிமன்ற நீதிபதி ராஜா சொக்கலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, புதிய நிர்வாக அலுவல் கோட்டத்தை திறந்து வைத்தும், உழவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கி, துல்லிய பண்ணைய தொழில்நுட்ப நூலை வெளியிட்டு பேசினார்.
நீடித்து நிலைக்கும் வேளாண் வர்த்தக சந்தைகள் என்ற தலைப்பில், திருச்சி மகளிர் தோட்டக்கலைக்கல்லூரி தனி அலுவலர் பாலமோகன் கலந்து கொண்டு பேசினார். சேலம் மாவட்ட வன அலுவலர் தங்கராஜ் கலந்து கொண்டு, சிறந்த உழவர்களுக்கு பரிசு வழங்கி, வன வளத்தையும், வேளாண்மையையும் ஒப்பிட்டுப் பேசினார்.
தொழிலதிபர் ராமசாமி, முன்னாள் எம்.எல்.ஏ., சுந்தரம், கரும்பு உற்பத்தியாளர் சங்க தலைவர் அம்மம்பாளையம் கோவிந்தராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில், 1,500க்கும் மேற்பட்ட உழவர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆண்டு எம்.ஜி.பி., நிறுவனம் மூலம் ஒப்பந்த பண்ணையத்தில் தொடர்ந்து சாகுபடி செய்யும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உழவர்களுக்கு, 1.05

லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை மற்றும் பேட்டரியால் இயங்கும் கைத்தெளிப்பான் ஆகியவை வழங்கப்பட்டது.

யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் திருச்சி கோட்ட மேலாளர் சம்பத்குமார், இலக்கிய திறனாய்வாளர் கொடைக்கானல் காந்தி, சென்னை வக்கீல் நீதிச்செல்வன், கலைத்தமிழ் மையம் பாஸ்கர், கெங்கவல்லி ஒன்றிய தலைவர் மருதமுத்து உள்பட பலர் கலந்துகொண்டனர்

## ணெய் பனை பயிர் அதிக சாகுபடி

ஆத்தூர்: ஆத்தூர் பகுதிகளில், எண்ணெய் பனை பயிர் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. பாமாயில் தயாரிக்க பயன்படும் எண்ணெய் பனையில் விளையும் காய்களை, அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தில், எண்ணெய் வித்து பயிர்களான, கடலை, ஆமணக்கு, எள், சூரியகாந்தி போன்ற பயிர்களுக்கு, போதிய பாசன வசதியின்மை, விலை குறைவு காரணமாக, சாகுபடி வெகுவாக குறைந்து வருகிறது.

இந்நிலையில், பாசன வசதி மற்றும் பாசனம் இல்லாத மாவட்டங்களை, வேளாண்த்துறை மூலம் ஆய்வு செய்யப்பட்டது. அப்போது, எண்ணெய் பயிர்களுக்கு ஏற்ற மண் வளம், மண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில், சேலம் ஆத்தூர், தலைவாசல், விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட, 13 மாவட்டங்கள், பாமாயில் பயிர் செய்வதற்கு ஏதுவான பகுதியாக கண்டறியப்பட்டது.

அதையடுத்து, பாமாயில் செடிகள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. சேலம் ஆத்தூர் பகுதியில், தலைவாசல், வி.கூட்ரோடு, பெரிய÷ரி, ஊனத்தூர் மற்றும் கூகையூர், பாக்கம்பாடி, குரால், வீரபயங்கரம் உள்ளிட்ட கிராமங்களில், 200 ஏக்கர் அளவில் பயிர் செய்யப்பட்டுள்ளது.

மூன்று முதல் ஐந்து ஆண்டு பயிராக, பாமாயில் செடிகள் வளர்ந்து காணப்படுகிறது. இந்த எண்ணெய் பனை செடிகளில் உள்ள, குருத்துகளில், "ஈச்சம்பழம்' அளவுக்கு கொத்துக் கொத்தாக கறுப்பு மற்றும் நீலம் கலந்த, "கறுநீலம்' நிறத்தில் காய்கள் உள்ளன.

இதுகுறித்து பெரியேரி கிராமத்தை சேர்ந்த விவசாயி பழனிசாமி கூறியதாவது:

சமையல் எண்ணெய்களான கடலை, நல்லெண்ணய், சூரியகாந்தி போன்றவை விலை அதிகளவில் உள்ளது. அதற்கு மாற்றாக, மலேசியாவில் அதிளவில் விளைவிக்கப்படும், எண்ணெய் பனை பயிர் சாகுபடி, தமிழகத்தில் பரவலாக உள்ளது. ஏக்கருக்கு, 56 செடிகள் நடவு செய்தால், மூன்று ஆண்டில் ஈச்சங்காய் போன்று, காய்கள் பிடிக்கிறது.

ஐந்து ஆண்டில், செடிக்கு, 50 கிலோ வீதம் காய்கள் இருக்கும். விழுப்புரம் மாவட்டத்தில், பாமாயில் அரவை ஆலை கட்டும் பணிகளை அரசு விரைவாக துவங்கி, காய்களை அரசே கொள்முதல் செய்ய வேண்டும். அதனால், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கும்.

இவ்வாறு கூறினார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

19.11.2012 A.M

## நெல் சாகுபடி செய்ய விவசாயிகள் தயக்கம்

உடுமலை.: அமராவதி அணையில் இருந்து கல்லாபுரம் வாய்க்காலில் தண்ணீர் திறந்தும் நெல் சாகுபடி செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர்.

உடுமலை அருகே உள்ள அமராவதி அணை மூலம் திருப்பூர் , கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால் பாசனத்தில் 3500 ஏக்கர் நிலம் உள்ளது.

அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் முதல் மார்ச் மாதம் வரை பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கும்,செப்டம்பர் முதல் ஜனவரி வரை புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கும் தண்ணீர் திறக்கப் படுகிறது. பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும் போது கல்லாபுரம்,ராமகுளம் வாய்க்கால் பாசனத்துக்கும் தண்ணீர் திறக்கப்படும். கடந்த 5ம் தேதி பழைய ஆயக்கட்டு பாசனத்தோடு கல்லாபுரம் ,ராமகுளம் பாசனத்துக்கும் 50 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நெல் சாகுபடிக்காக இந்த தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ஆனால் நெல்சாகுபடி செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர்.

அணையில் தற்போது குறைந்த அளவே தண்ணீர் இருக்கிறது. மழை பெய்யாவிட்டால் நெல் விளைவது சந்தேகம் என்பதால் யாரும் சாகுபடியில் ஆர்வம் காட்டவில்லை. திறக்கப்பட்டுள்ள தண்ணீரை விவசாயிகள் கரும்பு சாகுபடிக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

## ஊத்துக்குளி வட்டார விவசாயிகளுக்கு ராபி முன்பருவ பயிற்சி முகாம்

திருப்பூர், : ஊத்துக்குளி வட்டார வேளாண்மைத்துறை சார்பில் ஆட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான ராபி முன் பருவ பயிற்சி முகாம் செங்கப்பள்ளியில் உள்ள அழகு நாச்சியம்மன் திருமண மண்டபத்தில் நடந்தது.

பயிற்சி முகாமுக்கு செங்கப்பள்ளி ஊராட்சி தலைவர் மணி தலைமை வகித்தார். கருமஞ்சிறை ஊராட்சி தலைவர் சங்கீதா , நடுப்பட்டி ஊராட்சி தலைவர் சுப்பிரமணியம் , நவக்காடு ஊராட்சி தலைவர் பாவாத்தாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊத்துக்குளி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேலுச்சாமி ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்தல், மண்புழு தயாரித்தல் மற்றும் அதன் நன்மைகள், சான்றுவிதை உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டின் அவசியம் , மண்மாதிரியின் அடிப் படையில் உரங்கள் இடுவதன் அவசியம் ஆகியவை குறித்து விளக்கி பேசினார்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் சிவசுப்பிரமணியன், இப்பருவத்தில் பயிரிடப்படும் காய்கறிகள் என்ற தலைப்பிலும், விதைச்சான்று அலுவலர் சிவக்குமார் சான்று விதை உபயோகிப்பின் பயன் மற்றும் அதன் உற்பத்தி முறைகள் என்ற தலைப்பிலும், பட்டு வளர்ச்சித்துறை ஆய்வாளர் சந்திரன்

பட்டுபுழு வளர்ப்பின் முக்கியத்துவம் என்ற தலைப்பிலும் , இளநிலை வேளாண் பொறியாளர் பொன்னம்பலம் விவசாயத்தில் எந்திரங்களின் பயன்பாடுகள் என்ற தலைப்பிலும் பேசினார்கள். மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் அதன் பயன்கள் குறித்து மண்புழு உரம் உரிமையாளர் மனோன் மணியன் சிறப்புரையாற்றினார். உதவி வேளாண்மை அலுவலர் கோவிந்தராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

அனைத்து துறைகள் சார்பில் விவசாயிகள் கண்டு பயன்பெறும் வகையில் கருத்து காட்சியும் அமைக்கப்பட்டு இருந்தது. தொடர்ந்து செயல் விளக்கங்களும் செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர் நடந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் விவசாயிகள் கேட்ட கேள்விகளுக்கு அதிகாரிகள் பதில் அளித்தனர். முகாம் ஏற்பாடுகளை உதவி விதை அலுவலர் விஸ்வநாதன் , உதவி வேளாண்மை அலுவலர்கள் பெஞ்சமின் , முத்துலட்சுமி, மணிவண்ணன், துணை வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் வனிதா , தொழில் நுட்ப வல்லுனர்கள் கங்கா, ரவி ஆகியோர் செய்திருந்தனர்.

## குமரியில் விவசாய சங்கம் மூலம் மதிப்புகூட்டு பொருள் தயாரிப்பு



நாகர்கோவில் : விவசாயிகளுக்கு உதவும் வகையில் 2008ம் ஆண்டு வேளாண்துறை மறுசீரமைப்பு செய்யப்பட்டபோது, துணை இயக்குநர் வேளாண் வணிகம் என்ற புதிய பணியிடம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் இந்த அதிகாரிகள் மூலம் விவசாயிகள் தங்கள் விளை பொருளை கமிஷன் வியாபாரி மூலம் விற்காமல் நேரடியாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தேங்காய் விவசாயிகள் முன்னணி எண்ணெய் தயாரிப்பு நிறுவனங்களுக்கு தேங்காய்களை விற்பனை செய்யவும், அரிசி ஆலைகளுக்கு நேரடியாக நெல் விற்பனை செய்வது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக விவசாயிகளை ஒருங்கிணைக்கும் விதமாக மகளிர் சுயஉதவிக்குழுக்கள் போன்று உழவர் குழுக்கள் அமைக்கப்பட்டன. இதில் ஆண் மற்றும் பெண் விவசாயிகள் சேர்க்கப்பட்டனர்.

2009ம் ஆண்டு குமரியில் சந்திரதாஸ் இதன் துணை இயக்குனராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து

24 உழவர் குழுக்கள் அமைக்கப்பட்டன. இதில் சில குழுக்கள் மட்டுமே மிகவும் ஆர்வத்துடன் உள்ளன. இந்நிலையில் இவர்களுக்கு மதிப்பு கூட்டப்பட்ட விவசாய பொருட்களை தயாரித்து விற்பனை செய்யும் திட்டத்தை சந்திரதாஸ் உருவாக்கினார். இதன்படி முதன்முறையாக பல்வேறு குழுக்களை ஒன்றிணைத்து நாஞ்சில் நாட்டு வேளாண் உற்பத்தியாளர் சங்கம் உருவாக்கப்பட்டது. இச்சங்கம் மூலம் பழச்சாறுகள், ஊறுகாய்கள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

முதல்கட்டமாக திருச்சூரில் உள்ள தென்னை மற்றும் அன்னாசிப்பழ ஆராய்ச்சி மையம், திருவனந்தபுரத்தில் உள்ள மரச்சீனி கிழங்கு ஆய்வு மையம், உள்பட கேரளாவில் உள்ள பல்வேறு ஆராய்ச்சி மையங்களுக்கு விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டனர். மாவட்ட தொழில் மைய அதிகாரிகள், உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள், வேளாண் அறிவியல் மைய அதிகாரிகள் ஆகியோர் தயாரிப்பு முறை, பேக்கிங் செய்தல், உணவு பாதுகாப்பு சட்டம், மார்க் கெட்டிங் உள்ளிட்ட அனைத்து விதமான பயிற்சிகளும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. இதையடுத்து தற்போது 6 குழுக்கள் இணைந்து பழச்சாறுகள் மற்றும் ஊறுகாய் வகைகள் தயாரித்து வடசேரி உழவர்சந்தையில் விற்பனைக்கு வைத்துள்ளனர்.

25 சதவீத மானியத்துடன் 50 லட்சம் கடன்: இதுபற்றி ஓய்வுபெற்ற துணை இயக்குனர் சந்திரதாசிடம் கேட்டபோது, விவசாயிகளுக்கு நியாயமாக விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு வழிகாட்டுதல் படி மேற்கொண்டோம். இத்தொழிலுக்கு நவீன கருவிகள் வாங்க 25 சதவீத மானியத்துடன் 50 லட்சம் வரை உணவு பதப்படுத்தும் திட்டம் மூலம் கடன் பெற முடியும். தமிழ்நாட்டில் முதல் முறையாக குமரியில் முன்மாதிரியாக இத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.11.2012 A.M**

## சங்கரன்கோவில் மார்க்கெட்டில் நவதானியங்கள் விலை அதிகரிப்பு

சங்கரன்கோவில் மார்க்கெட்டில் நவதானியங்கள் விலை அதிகரித்துள்ளது.

விலை அதிகரிப்பு

சங்கரன்கோவில் மார்க்கெட்டில் நவதானியங்கள் விலை அதிகரித்து உள்ளது. கடந்த வாரம் ரூ.6ஆயிரத்து 200க்கு விற்ற பாசிப்பருப்பு ரூ. 6ஆயிரத்து 400 ஆகவும், ரூ.6ஆயிரத்து 700க்கு விற்ற துவரம் பருப்பு ரூ. 6ஆயிரத்து 800 ஆகவும், ரூ.6ஆயிரத்து 300க்கு விற்ற கடலைப் பருப்பு ரூ.6ஆயிரத்து 400 ஆகவும், ரூ.4ஆயிரத்து 300க்கு விற்ற பாசிப்பயறு ரூ. 4ஆயிரத்து 350 ஆகவும் விலை உயர்ந்து உள்ளது.

ரூ.5ஆயிரத்து 300க்கு விற்ற தொலிப் பருப்பு ரூ. 5ஆயிரத்து 100ஆகவும், ரூ.ஆயிரத்து 600 க்கு விற்ற மக்காச்சோளம் ரூ.ஆயிரத்து 500 ஆகவும் விலை குறைந்துள்ளது. மற்ற நவதானியங்கள் விலையில் கடந்தவார நிலையே நீடிக்கிறது.
நவதானியங்கள் விலை விவரம் வருமாறு:

விலை விவரம் (100 கிலோ)

| | |
|---|---|
| பாசிப் பருப்பு ரூ. | 6,400 |
| துவரம் பருப்பு ரூ. | 6,800 |
| உளுந்து ரூ. | 4,300 |
| தொலிப் பருப்பு ரூ | 5,100 |
| கடலைப் பருப்பு ரூ. | 6,400 |
| பாசிப்பயறு ரூ. | 4,350 |
| மணிப்பருப்பு ரூ. | 6,000 |
| மக்காச்சோளம் ரூ. | 1,500 |
| எள் ரூ. | 4,400 |
| சூரியகாந்தி ரூ. | 2,900 |

நெட்டைச்சோளம்ரூ.1,000

கேழ்வரகுரூ.1,250

கம்பரிசிரூ.1,450

## குன்னத்தூர் பகுதியில் கூலி ஆட்கள் பற்றாக்குறையால் நிலக்கடலை அறுவடை பாதிப்பு

குன்னத்தூர் பகுதி யில் கூலி ஆட்கள் பற் றாக்குறை காரணமாக நிலக்கடலை அறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டு உள்ளது.

நிலக்கடலை சாகுபடி

திருப்பூர் மாவட்டம் குன் னத்தூர் சுற்றுப்பகுதிகளான சின்னியம்பாளையம் , கண பதிபாளையம், வலைய பாளையம், குறிச்சி, குறிச்சி புதூர், ஆயிகவுண்டன் பாளை யம், இடையபாளையம் ஆகிய பகுதிகளில் 500க்கும் மேற் பட்ட ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலை சாகுபடி செய் யப்பட்டு உள்ளது. செம்மண் பூமியாக இந்த பகுதி இருப்ப தால் நிலக்கடலை மற்றும் சோளத்தை மானாவாரி பயி ராக பயிரிட்டு உள்ளனர்.

இந்த பகுதியில் கோ 2, சி.ஆர்.2 வகை நிலக்கடலை பயிரை பயிரிட்டு உள்ளனர். தற்போது நிலக்கடலை அறு வடை பணிகள் தொடங்கி உள்ளது. பனிப்பொழிவு அதிகமாக இருப்பதால் நிலக் கடலை செடியின் இலைகள் சுருங்கி வருகிறது. அதனால் நிலக்கடலை செடியை பிடுங்கி எடுத்து செடியில் இருந்து கடலை பிரிக்கும் பணி வேகமாக நடந்து வரு கிறது.

ஆட்கள் பற்றாக்குறை

நிலக்கடலை செடியை பிடுங்கி எடுக்கும் பணிக்கு கூலி ஆட்கள் தேவைப்படு கிறது. ஒரு ஏக்கரில் பயிரிட் டுள்ள நிலக்கடலை செடியை பிடுங்கி நிலக்கடலை எடுப் பதற்கு 15 பேர் முதல் 20 பேர் வரை தேவைப்படுகிறார்கள். இவர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 6 ஆயிரம் முதல் ரூ. 8 ஆயிரம் வரை கூலித்தொகை ஆவதாக விவசாயிகள் தெரிவித்தனர். குன்னத்தூர் பகுதியில் கூலி ஆட்கள் பற்றாக்குறை காரண மாக சேலம் மாவட்டம் சங்ககிரி , எடப்பாடி, வீரப்பூர் போன்ற ஊர்களில் இருந்து கூலி ஆட்களை குன்னத் தூருக்கு வரவழைத்து நிலக் கடலை அறுவடை பணிகளை விவசாயிகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

தற்போது வெளியூர்களில் இருந்து வரும் கூலி ஆட்க ளுக்கும் பற்றாக்குறை ஏற் பட்டு உள்ளதால் குன்னத்தூர் பகுதியில் நிலக்கடலை அறு வடை பணிகள் பாதிக்கப்பட்டு உள்ளது. இன்னும் 15 நாட் களுக்குள் நிலக்கடலை ஆறு வடை பணிகளை முடிக்க வேண்டிய கட்டாயத்தில் விவ சாயிகள் உள்ளனர். இதனால் வெளியூர்களில் இருந்து அதிகப்படியான கூலியை கொடுத்து வேலையாட்களை அழைத்து வர விவசாயிகள் முடிவு செய்து உள்ளனர்.